**DEPOSITION OF WITNESS**

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KANGAYAM**

| | | |
|---|---|---|
| Calender | : | CC .No.220/2014 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W. 6 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனியப்பன் | தொழில் | : | பணி ஓய்வு |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஆறுமுக நையினார் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 29.04.2024.

**முதல் விசாரணை**

1. நான் தமிழ்நாடு காவல் துறையில் உதகை மதுவிலக்கு தடுப்பு பிரிவில் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்து 30.04.2016 ம் தேதியன்று பணி ஓய்வு பெற்றுள்ளேன். நான் இதற்கு முன்பு காங்கயம் காவல் நிலையத்தில் வட்ட ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 17.11.2013 ம் தேதியன்று 13.00 மணிக்கு காங்கயம் காவல் நிலைய பொறுப்பில் இருந்த உதவி ஆய்வாளர் திரு.விஜயபாஸ்கர் என்பவரிடம் பாலசுப்பிரமணியம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகாரின் பேரில்நிலைய குற்ற எண் 463/2013, பிரிவுகள் 457, 380 இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.8** ஆகும்.

2. பின்பு அவர் இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்டு கடந்த 17.11.2013 ம் தேதியன்று 13.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளான பாலசுப்பிரமணியன், செந்தில்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9** ஆகும்.

பின்பு சாட்சிகளான பாலசுப்பிரமணியம், வள்ளியத்தாள், சிவக்குமார், மற்றொரு பாலசுப்பிரமணியன், செந்தில்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கை தொடர் புலன் விசாரணைக்கு வேண்டி எனது பார்வைக்கு வைத்தார்.

3. பின்னிட்டு நான் இவ்வழக்கை தொடர் புலன் விசாரணைக்கு எடுத்த கொண்டு இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்ட எதிரியை தேடிவந்த நிலையில் 30.11.2013 ம் தேதி காலை 01.15 மணிக்கு காங்கயம் பேருந்து நிலையம் சூர்யா ஓட்டல் முன்பு வைத்து பெயர் விலாசம் கேட்டு தெரிந்த ஆஜர் எதிரி எங்களை கண்டு ஓட எத்தனித்தவரை பிடித்து விசாரிக்க மேற்படி எதிரியானவர் காங்கயம் காவல் நிலைய குற்ற எண் 463/2013 மற்றும் இந்த வழக்கில் சம்மந்தப்பட்டிருப்பது தெரிய வந்தது. பின்பு எதிரியை பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்த சாட்சிகளான பாரதி மோகன், திருமூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் கைது செய்து விசாரித்ததில் எதிரி தானாக முன்வந்து குற்றத்தை ஒப்புக் கொண்டு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகளின் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல்வாக்குமூலத்தின் பேரில் கடந்த 14.11.2013 ம் தேதி இரவு அய்யாசாமி நகர் காலனியில் ஒரு வீட்டில் நகை மற்றும் பணம் ரூ.6,00,000/- திருடியதாகவும், அதன் பிறகு 23.11.2013 ம் தேதி இரவு பரஞ்சேர்வழியில் உள்ள ஒரு வீட்டை உடைத்து பணம் ரூ.4000/- மற்றும் 1/2 பவுன் மோதிரத்தை திருடிய குற்றத்தை ஒப்புக் கொண்டார். மேலும் அய்யாசாமி காலனி வீட்டில் திருடிய பணத்தில் ரூ.4000/-ஐ தனது பாக்கெட்டில் வைத்திருப்பதாகவும், பரஞ்சேர் வழி வீட்டில் திருடிய மோதிரம் 1/2 பவுனை தனது கையில் அணிந்திருந்தார். எதிரியானவர் தன்னை அழைத்து சென்றால் திருடிய வீட்டை அடையாளம் காட்டியும், திருடிய சொத்துக்களை எடுத்து ஆஜர் செய்வதாகவும், தான் கொடுத்து வைத்திருக்கும் நபர்களிடம் சென்று வாங்கி தருவதாகவும் சொன்னார்.

4. பின்பு சாட்சிகள் பாரதி மோகன், திருமூர்த்தி ஆகியோர்களின் முன்னிலையில் 30.11.2013 ம் தேதி காலை சுமார் 02.30 மணிக்கு சூர்யா ஓட்டல் முன்பு வைத்து எதிரி தனது பாக்கட்டிலிருந்து எடுத்த பணம் ரூ.4000/-யை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். பின்பு எதிரி மற்றும் சாட்சிகளுடன் திண்டுக்கல் மாவட்டம் முத்தனம்பட்டி சென்று எ திரி தங்கியிருந்த கேபிள் குமார் என்பவர் வீட்டிற்கு வந்து எதிரி மேஜை டிராயரை திறந்து எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.5, 55,000/- பணத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். மேற்படி கேபிள் குமார் என்பவர் வீட்டில் தங்கியிருந்த சபரி என்பவரிடம் எதிரி கொடுத்து வைத்திருந்த ஒரு பவுன் தங்க காசுகள் 7, 1/2 பவுன் காசு 1 ஆகியவற்றை

மேற்படி சபரி எடுத்து ஆஜர் செய்ததை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். பின்பு எதிரி மற்றம் சாட்சிகளுடன் மதுரை ஈபி காலனி, 11 வது வீதி எதிரி அடையாளம் காட்டிய மனோஜ் என்பவரது வீட்டில் எதிரி கொடுத்து வைத்திருந்த தங்க செயின் 4 பவுன் , ஆறு பவுன் எடையுள்ள 4 தங்க வளையல்கள், தங்க தோடு ஒரு செட், ஆகியவற்றை மனோஜ் என்பவர் எடுத்து ஆஜர் செய்ததை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் காலை 09.30 மணிக்கு மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். சாட்சிகள் சபரி, மனோஜ் ஆகியோர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். எதிரி மற்றும் சொத்துக்களுடன் புறப்பட்டு நிலையம் வந்து 13.30 மணிக்கு எதிரியின் கைது பற்றிய விவரத்தை எதிரியின் தந்தை குமாருக்கு தகவல் தெரிவித்தேன். பிறகு எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். சாட்சிகள் பாரதி மோகன், திருமுர்த்தி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. பின்பு சாட்சி பாலசுப்பிரமணியம் என்பவரை நிலையம் வரவழைத்து வழக்கு சொத்துக்களை அவரிடம் அடையாளம் காட்ட தங்களது வீட்டில் திருடப்பட்ட சொத்துக்கள் என கூ றினார். பாலசுப்பிரமணியத்தை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்க சொத்துக்களை படிவம் –95 மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 19.12.2013 ம் தேதி எனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவு 457, 380 இ.த.ச குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன். எதிரி கொடுத்த **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10, கைப்பற்றுதல் மகஜர்கள் (4–எண்ணிக்கைகள்) அ.சா.ஆ.11, அ.சா.ஆ.12, அ.சா.ஆ.13, அ.சா.ஆ.14, எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட ரூ.5,55,000/–க்கான தொகை பட்டியல் எண்கள் அ.சா.ஆ.15, எதிரியிடமிருந்து கைப்பற்றிய தொகை ரூ.4000/– அ.சா.ஆ.16, எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட 1 பவுன் தங்க காசுகள் 7 எண்ணிக்கை அ.சா.ஆ.17, 1/2 பவுன் தங்க காசு அ.சா.ஆ.18 மற்றும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட 4 பவுன் தங்க செயின் அ.சா.ஆ.19, 6 பவுன் எடையுள்ள தங்க வளையல்கள் 4 அ.சா.ஆ.20, 3.500 கிராம் எடை கொண்ட தங்க தோடு 2– செட் அ.சா.ஆ.21, 1/2 பவுன் தங்க மோதிரம் அ.சா.ஆ.22** ஆகும்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

1. இவ்வழக்கு சம்பவமானது 16.11.2013 ம் தேதி மாலை 19.30 முதல் காலை 06.30 மணி வரை என்றால் சரிதான். ஆனால் புகாரானது 17.11.2013 ம் தேதி 13.00 மணிக்கு காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

காவல் நிலையத்திற்கும், சம்பவ இடத்திற்கும் இடையே சுமார் 1–1/2 கி/மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கில் கேபிள் குமார் என்பவரை ஒரு சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். கேபிள் குமார் என்பவர் வாடகைக்கு விடப்பட்ட வீட்டில் தான் பணம் ரூ.5,50,000/– கைப்பற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். கேபிள் குமார் என்பவர் தான் அந்த வீட்டின் உரிமையாளர் என்றால் சரிதான். எதிரியை கைது செய்தபோது வயது 20 என்றால் சரியல்ல, 23 வயது. புகார்தாரர் தனது காணாமல் போ னநகையின் பில்ரசீதுகள் எதுவும் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் லாக்கரில் எவ்வளவு பணம் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கடந்த 30.11.2013 ம்தேதியன்று புகார்தாரருக்கு நகை கிடைத்துவிட்டதாக தகவல் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எத்தகைய சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Typed/before me in open Court read over/interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2024.04.29 21:13:00 +0530

Judicial Magistrate
Kangayam.